# ◎ சக்கரம் ◎

-செய்திப் பத்திரிகை-

"நாம் எடுத்த முடிவுகளுள் பின்தங்கிய பிரதேச மாணவர்களின் கல்வியில் குறிப்பாக விஞ்ஞானக் கல்வியில் அவர்களின் அறிவு மட்டத்தினை உயர்த்துவது......"

-: கட்டுரையாளர்

"மருத்துவ சுகாதார வசதிகளைப் பொறுத்த வரையில் பெரும் பிரச்சினை எதிர் நோக்கப்படுகின்றது. இங்குள்ள சுமார் முப்பதாயிரம் மக்களின் மருத்துவ தேவைகள்ள......"

-: நேரடி ரிப்போர்ட்

"இது கைலாசபதி கலையரங்கின் ஒரு வழக்கம். இது இன்று நேற்று நடக்கும் ஒன்றல்ல. ஆனால்......

-: விம்பங்கள்

---

வெளியீடு:

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்,

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,

யாழ்ப்பாணம்.

# சக்கரம்

பாதை1. பயணம்2. யூலை1991


உள்ளே


விஞ்ஞானபீடத்தின் வெற்றி.....3
வடமராட்சி கிழக்கின்
கல்வியில் .....4
செய்திகள்(வளாக வலம்)....6
அழுகுரல்கள் கேட்கின்றன
மருஅகதி முகாம்.....8
கவிதைக்கலசம் .........10
நாம் திருந்தவில்லை.......12
இலக்கியச்சிமிழ்...........14
எங்கோ கேட்ட பொன்
மொழிகள் ....16
மடு அகதி முகாம்........17
போராளிகளைப்
பராமரிப்பதில் நாம்...18



பிரதம ஆசிரியர் : க.சிவதாஸ்
உதவி : வே.சந்திரசேகர

தொடர்பு முகவரி:
விஞ்ஞான பீட
மாணவர் ஒன்றியம்
யாழ்.பல்கலைக்கழகம்


## தண்ணீரின் விலை 3ரூபா 60சதம்

யாழ் பல்கலைக்கழக "பாலசிங்கம் ஆண்கள் விடுதி"யில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஒரு கலன் தண்ணீருக்கான செலவு 3ரூபா 60சதம் ஆம். எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக ஒரு கலன் தண்ணீருக்கு மேற்கூறியளவு செலவு ஏற்படுகின்றது.

## நிதியுதவி

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்டுவரும் தேனீர்ச்சாலையிலிருந்து கிடைக்கும் வருமானத்தை மிகவும் கஷ்டநிலையிலிருக்கும் மாணவர் இருவர்களுக்கு பங்கிட்டு வழங்குவது என்ற முடிவுக்கு ஏற்ப அண்மையில் விஞ்ஞானபீட மாணவர்கள் இருவர் அவ்வுதவியைப் பெற்றுக்கொண்டனர். அவர்களுக்குரிய பணத்தை விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய சிரேஷ்ட பொருளாளர் கலாநிதி.எஸ்.சிறிசற்குணராஜா வழங்கினார்.

## விஞ்ஞானபீடத்தின் வெற்றி

யாழ். பல்கலைக்கழகத்தின் பீடங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில், விஞ்ஞானபீடம் தொடர்ந்து மூன்றாவது தடவையாக வெற்றி பெற்றிருக்கிறது. இவ்வெற்றியானது விஞ்ஞானபீட மாணவர்களின் திறமைக்கும் அறிவுக்கும் உறுதி சேர்க்கும் ஒரு சான்று ஆகும். இவ்வெற்றி குறித்து விஞ்ஞானபீட மாணவர்கள் அனைவரும் பெருமைப்படலாம். ஏனெனில் இவ்வெற்றியானது விஞ்ஞான மாணவர்களின் விடாமுயற்சியினாலும், திறமையின் ஒழுங்கமைப்பினாலும், சிறந்த ஒற்றுமையுணர்வினாலுமே சாத்தியமானது.

எமது பல்கலைக்கழகத்தின் ஆரம் காலத்திலிருந்து 1987ஆம் ஆண்டு வரை விஞ்ஞான பீடம் ஒரே ஒரு முறை மாத்திரம வெற்றி பெற்றிருந்தது. ஆனால் 1988ஆம் ஆண்டிலிருந்து விஞ்ஞானபீடம் தொடர்ந்து வெற்றி பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். இருந்த போதிலும் இம்முறை கிடைத்த வெற்றிக்கு மாணவர்களின் திறமையுடன் கலைப்பீடம் விட்ட சில தவறுகளும் சாதகமாயிருந்தன. கலைப்பீடத்தை விட சில புள்ளிகள் மாத்திரமே விஞ்ஞானபீடம் அதிகமாக பெற்றிருந்தது. விஞ்ஞானபீடத்தைப் பொறுத்தவரை இந்நிலமை இலகுவாகத் தவிர்க்கப்படக்கூடியது. ஏனெனில் பாடசாலைகளில் மிகத்திறமையாக போட்டிகளில் பங்கு கொண்ட பலர் பல்கலைக்கழகத்திற்கு வந்தபின் எதிலுமே பங்குபற்றாமல் இருக்கிறார்கள். இது போல் தொடர்ந்து இருக்காமல் திறமையுள்ளவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பங்குபற்றுவார்களாயின், விஞ்ஞான பீடமானது தொடர்ந்து வெற்றி பெறுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகி விடும்.

ஆகவே, இனிவரும் காலங்களிலும், விஞ்ஞான பீடம் வெற்றி பெற நாம் அனைவரும் சேர்ந்து உழைப்போமாக.

-ஆசிரியர்-

## வடமராட்சி கிழக்கின் கல்வி வளர்ச்சியில்

எமது சமூகத்தின் அங்கங்களுள்ளே ஒன்றான தாகத் திகழ்கிற, பல்கலைக்கழக மாயவராகிய நாம் எம் சமூகத்திற்குக் கணிசமான பங்களிப்புச் செய்யவேண்டியது மிக மிக அவசியமான தொன்றாகும். மாணவர் சமூகத்தின் வழி காட்டியாகவும், எம் எதிர்கால சந்ததியினரின் வளமான, ஆரோக்கியமான, சிந்தனைகளுடனான நல்வாழ்விற்காக எம் மால் இயன்ற பங்களிப்பை இச்சமூகத்திற்குச் செய்யவேண்டிய அதுவும் உடனடியாகச் செய்யவேண்டிய நிலையில் நாமிருக்கின் றோம். எமது தேசிய விடுதலைப் போராட்ட ஆரம்ப காலங்களில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தமது சமூக கடமைகளில் தீவிரமாகச் செயற்பட்டமை, ஆரம்ப கால வெகுஜன போராட்டங்களில் யாழ்.பல்கலைக்கழகம் ஒரு முக்கிய தளமாக அமைந்தமை யாவரும் அறிந்த விடயமேயா கும். கிழக்கு மாகாணம் கடும் சூறுவளியினால் பாதிக்கப் பட்டபோது அம்மக்கட்கு உடனின்று உதவியமை, யாழ் பொதுசனநூல் நிலையம் இராணுவத்தால் எரிக்கப்பட்டு சமூகத்தின் அறிவு வளர்ச்சியைத் தடைப்படுத்த முயன்றபோது அதனை முறியடித்து மக்களிடம் துளித்துளியாக பெற்ற பணத் தில் நூல்கள் வாங்கி பொதுசனநூல் நிலையத்திற்கு அன்ப ளிப்புச் செய்ததன் மூலம் சமூகத்தின் பின்னடைவை வெற்றி கொண்டமை, தமிழ் பேசும் மக்களின் உரிமை போராட் டத்தை நசுக்கும் பொருட்டு அரசினால் அறிமுகப்படுத்தப் பட்ட "பயங்கரவாத் தடைச்சட்டத்திற்கு" எதிராக பலத் த போராட்டங்கள் நடத்தியமை, காலங்காலமாக இரா ணுவ வன்முறைக்கும், கலவரங்கட்கும் உட்படுத்தப்பட்டு அவதியுற்ற போதெல்லாம் அம்மக்களிற்குப் பலவழிகளிலும் தம்மால் இயன்றளவு உதவியமை போன்ற பல செயற்பாடு களைச் செய்து வந்திருக்கின்றது. எனினும் அண்மைக் காலங்க ளில் ஒரு வகையான தேக்க நிலை ஏற்பட்டது உண்மையே. அந்நிலைமையினைத்தகர்த்தெறிந்து எமது வரலாற்றுக் கடமை களை ஆய்வதுடன் மட்டுமன்றி அவற்றைச் சீர்திருத்தி செயற்

படுத்த வேண்டும் என்ற உறுதியுடன் எமது விஞ்ஞான மாணவர் ஒன்றியம் சில முடிவுகளை மேற் கொண்டது. எமது சிந்தனை மேலும் மேன்மையுறும் வண்ணம் உபவேந்தரிடமிருந்தும் சில ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றன. நாம் எடுத்த முடிவுகளுள் பின்தங்கிய பிரதேசங்களின் மாணவர்களின் அறிவு மட்டத்தினை உயர்த்துவது, அவர்களது சிந்தனையை ஊக்குவிப்பது போன்ற செயல்களும் உத்தேசிக்கப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அதன் பொருளாதார வளர்ச்சிக்கு விஞ்ஞானம், தொழில் நுட்பம் என்பன எத்துணை அவசியமானது என்பது வெளிப்படையாகவே தெரியத் தக்கதென்றால் மிகையேதும் இல்லை.

நாம் எமது கடமைகளிற்காக எம்மைத் தயார் படுத்திக் கொண்டிருந்த வேளையில் தான் வடமராட்சி கிழக்குப்பகுதியைச் சேர்ந்த வெற்றிலைக்கேணி, உடுத்துறை ஆகிய பகுதிகளிலுள்ள. ப்ர்டசாலைகளில் விஞ்ஞான ஆசிரியர்கள் பற்றாக்குறை பற்றிய பத்திரிகைச் செய்தி எமது ஒன்றியத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. விஞ்ஞான மாணவர் ஒன்றியமானது தனது பிரதிநிதிகளை உடனேயே அப்பிரதேசத்திற்கு அனுப்பி நிலைமைகளை ஆராய்ந்தது. அடுத்த நடவடிக்கையாக அப்பிரதேச மாணவர்களின் தேவைகளின் அவசியத்தின் அடிப்படையிலே குழுக்குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வார இறுதி நாட்களில் அங்கு சென்று கல்வி வளர்ச்சிக்குப் பணியாற்றுவது என முடிவு செய்யப்பட்டது.

(தொடரும்)

## வளாக வலம்

*----*----*

**சிறிலங்காப் படைகளால் பல்கலை மாணவன் கைது**

கடந்த யூன் மாதம் 8 ம் திகதி, கலைப்பீடத்தைச் சேர்ந்த 3ம் வருட மாணவன் ஜெயசீலன், அநுராதபுரத்தில் வைத்து சிறிலங்காப் படைகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரின் விடுதலை தொடர்பாக துணைவேந்தர் அவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்ட போதும், இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. இவரை விடுதலை செய்யக்கோரி கடந்த 24ம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றும் நடத்தப்பட்டது யாவரும் அறிந்ததே.

**தமிழீழ விடுதலைப்புலிகளினால் பல்கலை மாணவர்கள் கைது**

கலைப்பீடத்தைச் சேர்ந்த ஒரு மாணவி உட்பட 4மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். புவியியற்றுறை சிறப்பு மாணவன் சிறிநிவாசன், வர்த்தக 1ம் வருட மாணவன் கேதீஸ்வரன், பொருளாதார சிறப்பு மாணவன் கோவிந்தராஜா, கலைப்பீட 1ம் வருட மாணவி தர்சினி ஆகியோரே கைது செய்யப்பட்ட மாணவர்களாவர். இவர்களின் விடுதலை தொடர்பாக துணைவேந்தரும், மாணவரவைத்தலைவரும், புலிகளின் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். ஆனால் இன்னும் விசாரணை முடியாததால் விடுவிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் கைதுசெய்யப்பட்டு சுமார் இரு மாதங்களாகின்றது.

விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தினால் கடந்த வருடத்தைப் போன்று இந்த வருடமும் "விஞ்ஞான வாரம்" நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன்படி விஞ்ஞான பீட வருடங்களுக்கிடையில் மெய்வல்லுநர் போட்டிகள், கிரிக்கட், உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம்

வலைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் நடாத்த ஏற்பாடாகியுள்ளன். இம்முறை விசேட நிகழ்ச்சியாக 'முத்தமிழரங்கம்' என்னும் இலக்கிய நிகழ்ச்சிகளும் நடக்க ஏற்பாடாகியுள்ளன.

விஞ்ஞான பீட அவைக்கு மாணவ பிரதிநிதிகளாக திரு.வே.சந்திரசேகர் (பௌ.விஞ்) அவர்களும், திரு.இ.ரூபன் ராஜகருண (உயிரியல்.விஞ்) அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

ஆனையிறவு இராணுவமுகாம் தகர்ப்பில் ஈடுபட்டிருக்கும் போராளிகளில் காயமடைந்து வைத்தியசாலைக்கு வரும் போராளிகளுக்கு இரத்ததானம் செய்வதென்றும், காயமடைந்த போராளிகளை பராமரிப்பதென்றும், ~~10~~ 12.07.1991 நடந்த பொதுக்கூட்டத்தில் பல்கலைக்கழக மாணவரவை முடிவு செய்தது. இதன்படி சகல பீடங்களையும் சேர்ந்த மாணவ, மாணவிகள் இரத்ததானம் செய்வதிலும், போராளிகளைப் பராமரிக்கும் பணியிலும் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் எமது வளாகத்தின் கலைப்பீடத்தைச் சேர்ந்த அரசியல் பிரிவு விரிவுரையாளர் திரு. ரஞ்சகுமார் 15.07.1991 மரணமடைந்தார்.

"அழுகுரல்கள் கேட்கின்றன அகதிமுகாம் போலும்..."

OOOOO--மடு அகதிமுகாம் - மன்னார்--OOOOO

1990 யூன் மாதம் சிறிலங்கா படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் போர் ஆரம்பித்தபின் பலலட்சம் மக்கள் அகதிகளாக, சொந்த இடங்களில் இருந்து வெளியேறி உறவினர் வீடுகளிலும், காடுகளிலும், அகதிமுகாம்களிலும் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது உலகறிந்த விடயம். தமிழீழத்தில் தற்போது இயங்கி வரும் அகதிமுகாம்களில் மிகப்பெரியது மன்னார் மாவட்டத்தில் உள்ள மடு அகதிமுகாம் ஆகும்.

கடந்த மே மாதம் 7ம் திகதி, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் திரு இளம்பிறையன் தலைமையில் 42 மாணவர்கள் அடங்கிய குழு ஒன்று இம்முகாமுக்குப் புறப்பட்டுச் சென்றது. மடு அகதி முகாமின் நிலைபற்றியும், அங்கு எமது மாணவர்களாற்றிய பணி பற்றியும் சுருக்கமாகத் தெரியவைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மடு தேவாலய நிர்வாகத்தின் அநுசரணையுடன் இயங்கி வரும் இம்முகாமில் சுமார் 6000 குடும்பங்களைச் சேர்ந்த ஏறக்குறைய முப்பதாயிரம் மக்கள் தங்கியிருக்கிறார்கள். இம்முகாமானது பரந்தளவு நிலப்பரப்பில், ஒரு கிராமத்தின் அமைப்புடையது. இது 9 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திற்கும் ஒரு அருட்தந்தையும், இரு அருட்சகோதரிகளும் பொறுப்பாக இருக்கிறார்கள்.

இம்முகாமின் உணவு, மருத்துவ வசதிகள் தொடர்பான பணிகளில் MSF, UNCHR, ICRC போன்ற சர்வதேச அமைப்புக்கள் ஈடுபட்டுவருகின்றன.

எமது மாணவர் குழுவானது இம்முகாமில் அவதானித்தும், அங்குள்ள மக்களுடன் பழகியும், முக்கியமான 4 விடயங்களைத் தெரிந்து கொண்டார்கள். இருப்பிடவசதிகள், மருத்துவ சுகாதார வசதிகள், உணவு போசாக்கு வசதிகள், கல்வி வசதிகள் என்பவையே அவை நான்குமாகும்.

இருப்பிட வசதிகளைப் பொறுத்தவரை இம்முகாமானது மிகப் பரந்த நிலப்பரப்பில் உள்ளதால் இடப்பற்றாக்குறை இல்லை. அத்துடன் மடு ஆலயத்தில் அமைக்கப்பட்டிருந்த திருவிழாக் குடில்களுடன் மேலும் குடிசைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மருத்துவ சுகாதார வசதிகளைப் பொறுத்தவரையில் பெரும் பிரச்சனை எதிர்நோக்கப்படுகின்றது. இங்குள்ள சுமார் முப்பதாயிரம் மக்களின் மருத்துவ தேவைகளையும் ஒரு பிரெஞ்சு வைத்திய அதிகாரியும் ஒரு சுகாதார வைத்திய அதிகாரியுமே கவனிக்கும் பரிதாப நிலை நிலவுகிறது. பிரெஞ்சு வைத்தியக் குழு தன்னாலான வைத்திய சேவைகளை வழங்கினாலும் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் இங்குள்ள மக்களில் பலர் மலேரியா, வயிற்றோட்டம், கண்ணோய் போன்ற நோய்களால்பாதிக்கப்படுகிறார்கள். இங்கு மலசலகூட வசதிகள், குடிநீர் வசதிகள் போன்றவையும் குறைவாகவே உள்ளன. இதைவிட அவசர நோயாளர்களை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளும் மிகக் குறைவாகவே உள்ளன.

எம்.எஸ்.எவ், எஸ்.சீ.எவ், வாழ்வுதயம் போன்ற அமைப்புக்கள் உணவுப் பொருட்கள் பால்மா என்பவற்றை வழங்கி வருகின்றது. ஓரளவுக்கு உணவுத் தேவை பூர்த்தி செய்யப்பட்டாலும் பற்றாக் குறை நிலவத்தான் செய்கிறது. குறிப்பாக குழந்தைகளுக்கான உணவுகள் பற்றாக்குறையாக உள்ளது. இவை வெளிச்சந்தையில் பலமடங்கு விலையில் விற்பனையாகிறன.

(தொடர்ச்சி 19ம் பக்கத்தில்)

## ஏன் மௌனம்

உன்
ஆடையில் தீ!
நீயோ
மௌனித்திருக்கிறாய்
நிதர்சனங்களை
நேசிப்பதை விட்டுவிட்டு
விமர்சனங்களில்
மட்டுமேன்
விழிப்பாக இருக்கிறாய்?
தொலைந்து போன
உன்
முகவரிகளைத்
தேடுவதைவிட்டுவிட்டு
இரவல் முகவரிக்காக
ஏன்
ஏங்குகிறாய்?
ஏங்கிப்பயனில்லை
எழுந்துவிடு நண்பனே!
உன் மண்ணின் வரைபடம்
உருவழிந்து கிடைக்கையில்
தேசப்படத்தை
ஏன்
தேடி அலைகிறாய்
உன்
குரல்வளை
இன்னும் இருக்கையில்
இரவல் குரலிற்காக
ஏன் அலைகின்றாய்
ஏன் மௌனம்
எழுந்து விடு நண்பனே?

-காரைக்கவி-

## நாடு காத்திடக் கற்போம்

கல்வி முறைகள்
கைகொடுக்காததால்
கைகள் இங்கு - சுடு
கருவிகள் ஏந்தின

தரப்படுத்தல்கள்
முறைப்படுத்தப்பட்டதால்
தரணி புகழுமோர்
தமிழப்படை உதித்தது
செல்வமே கல்வியாய்
மதித்தவர் வாழ்வு
ஷெல்லினால் எழுதும்
விதிவழி நகருது
பள்ளி மீது குண்டுமாரி
சொல்லி அழவுங்கூடமாட்டார்
சுயநலங்கள் பேசிப்பேசி
பலயுகங்கள் கடத்திவிட்டார்

பள்ளி செல்லும் வயதினர் எல்லாம்
பள்ளி இன்றியே காவலரண்களில்!
தள்ளி நிற்கும் ஓர்சில பேரையும்
அள்ளி இணைப்போம் மண்மீட்பினில்

கல்வியே கருத்தாய் கட்ந்த எம்காலம்
புல்லிற் கிறைத்த நீராய் ஆனது-தமிழ்
மானம் காத்திங்கு வாழ்ந்திடவேண்டின்-
உயிரீ
தானம் செய்தின்று களத்தினில் சாய்
வோம்

ஏட்டை அளித்திடும் கல்வி விடுத்து
நாட்டை காத்திடும் கல்வி கற்போம்
கற்றபின் அவ்வழி நிற்போமாயின்
நற்றமிழீழம் வளங்கொழித்தோங்கும்

-அளவையூரான்-

# கவிதைக் களம்

## தூரம் அதிகம் இல்லை

பிரிய எதிரியே!
சகலமும்
உன்னுள்
அடக்கம்—உன்னை
தட்டிக்கேட்க
யாருமில்லை—என்ற
துணிவில் தானே
இத்தனை
அனர்த்தங்களையும்
விளைவிக்கின்றாய்.

ஆங்காங்கே
வெடித்த
புரட்சிப்
பீரங்கிகள்
இனி
உன்
எல்லைக்குள்ளேயே
வெடித்து
உன்னை
கதிகலக்க
வைக்கப்போகிறதே.

அட,
அறிவு கெட்டவனே!
இங்கு,
பற்றவைக்கப்பட்ட
நெருப்பு
உன்
கோட்டையை
நாசமாக்கப்போவதை
நீ
அறியவில்லையே.

அற்பனே
அடக்குமுறையும்
அடாவடித்தனமும்
அதிக
ஆயுள்கொண்டவை
அல்ல— நீ
அழியப்போவதும்
அதிக
தூரத்தில் இல்லை.

—வே. சந்திரசேகர்—
2ம் வருட வௌ. விஞ்.

(இக்கவிதை ரஞ்சன் விஜேரட்ன குண்டு வெடிப்புக்கு முன்பே எழுதி அனுப்பப்பட்டது—ஆசிரியர்)

## *நாம்* திருந்தவில்லை*

எமது பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பிரி வானது எமது மண்ணில் இயங்கும் மிக முக்கியமான [illegible] கலை நிறுவனமாகும். இந்நிறுவனமானது எமது கலைவடிவங்க ளைப் பாதுகாப்பதிலும் அவற்றை காலத்தின் தேவைக்கேற்ப நவீன மயப்படுத்துவதிலும் பெரும் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் பல கலை நிகழ்வுகள் கைலாசபதி கலையரங்கத்தில் அடிக்கடி நடைபெற்று வருவது யாவரும் அறிந்த விடயமாகும். ஆனால் கலையரங்கத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயத்தில் சில மாணவர்களினதும், வெளியாட்களினதும் சில செயற்பாடுகள் நுண்கலைப்பிரிவினருக்கு ஆத்திரத்தையும் மனவேதனையையும் உண்டா க்கியிருக்கிறது. நிகழ்ச்சிகளின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை விசில் சத்தமும், கூச்சலும், கடதாசி றொக்கட் வீச்சும் நடைபெற் றுவருகின்றன. இது கைலாசபதி கலையரங்கின் ஒரு வழக்கம் என்றே சொல்லலாம். ஏனெனில் இது இன்று நேற்று நடக்கும் ஒன்றல்ல. ஆனால் அண்மையில் நடைபெற்ற நுண்கலைப்பிரிவின் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியின் போது இடம்பெற்ற கூச்சலும் குழப்பமும், றொக்கட் வீச்சும் மிக மோசமானதாக பலருக் கும் எரிச்சலூட்டுவதாகவும், நிகழ்ச்சியில் பங்குகொண்ட கலை ஞர்களின் கவனத்தை குழப்புவதாகவும், நிகழ்ச்சியைத் தொடர் ந்து நடத்தமுடியாத சூழ்நிலையையும் தோற்றுவித்திருக்கிறது. இது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும். அத்து டன் இது போன்ற செயற்பாடுகள் எமது கலைவடிவங்களை இழிவுபடுத்தி அவமதிக்கின்றதாகவே அமைகின்றன. இந்நிலமை உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்னுமோர் கவலைக்குரிய செய்தி யாதெனில் நிகழ்ச்சிக்காக தம்மை அலங்கரித்துக் கொண்டு வந்த நுண் கலைப்பிரிவு மாணவிகளை நோக்கி "தேவடியாள்" என்ற சொல் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. இது வேதனைக்குரிய தும் தண்டனைக்குரியதுமான ஒரு செயலாகும். இது எம்மி டையே உள்ள சிலரின் குறுகிய, பிற்போக்குத்தனமான சிந் தனையின் வெளிப்பாடாகும்.

மேற்படி செயற்பாடுகளினால் கைலாசபதி கலை யரங்கில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு நுண்கலைப்பிரிவினர் தயங்குகின்றனர்.

ஆகவே - கலை நிகழ்ச்சிகளுக்கு இடையூறாக அமைகின்ற, கலைஞர்களை அவமதிக்கின்ற, பல்கலைக்கழகத்துக்கு களங்கம் கற்பிற்கும் சகலவிதமான செயற்பாடுகளும் கைவிடப்படவேண்டும். இது ஒவ்வொரு மனிதனும் தானே சிந்தித்து எம்மை நாமே திருத்திக்கொண்டு, புரிந்துணர்வின் அடிப்படையில் செயற்பட்டால்தான் சாத்தியமாகும்.

*-------*-------*

## சாட்சியின் சாதுர்யம்

நீதிமன்றம் ஒன்றிலே வழக்கு ஒன்று நடந்து கொண்டிருந்தது. அவர் ஒரு சிறந்த வழக்கறிஞர். தனது வாதத்திறமையினாலே சாட்சிகளை திணறடிப்பவர். அவர் சாட்சியொருவரை விசாரணை செய்து கொண்டிருந்தபோது அவரின் கேள்விகளுக்கு சாட்சியானவர் நீண்ட பதில்களை அளித்துக் கொண்டிருந்தார். வழக்கறிஞர் சாட்சியிடம் "நான் கேட்கும் கேள்விகளுக்கு 'ஆம்' 'இல்லை' எனப் பதிலளித்தால் போதுமானது என்றார். அதற்கு சாட்சியளித்தவர் "எல்லாக் கேள்விகளுக்கும் 'ஆம்' 'இல்லை' என விடையளிப்பது கடினம்" என்றார். அதற்கு வழக்கறிஞரோ "ஏன் முடியாது? எல்லாக் கேள்விகளுக்கும் அப்படியே பதிலளிக்கலாம்" என்றார். உடனே சாட்சி "உங்களிடம் நான் ஒரு கேள்வி கேட்கலாமா?" என்றார். வழக்கறிஞரும் சம்மதித்தார்.

"நீங்கள் திருடி வந்த தொழிலை இப்போது நிறுத்திவிட்டீர்களா?" என்றார் சாட்சி.

வழக்கறிஞர் பதிலளிக்கமுடியாது மௌனமானார்.

—நன்றி—
சிரித்திரன்.

கவிஞர்கள் நெருப்பைப் போன்றவர்கள். அவர்களின் கவிதை கள் தென்றலாகத், தேசை, தெய்வீக உணர்வூட்டுவனவாக இருப் பது போலவே, தீயாகிப் பொசுக்கும் ஆற்றலும் கொண்டவை யாகும்.

மகாகவிஞர் கம்பரும் இதற்கு விலக்கல்ல.
மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரமும்
இதற்கு விலக்கல்ல.

"கம்பனும்--- சோழனும்---" நட்பிற்கோர் உதாரணம்.
ஒருவர் மீது ஒருவர் வைக்கும் மதிப்புக்கோர் எடுத்துக்காட்டு.

சடையப்ப வள்ளல் கம்பனை அரசு புகழும் வண்ணம் உயர் த்தினார். சோழன். குலோத்துங்களே கம்பரை அகிலம் புகழும் வண்ணம் உயர்த்தினார்.. இராமாயணத்தை எழுதியவர் கம்பர், ஆனாலும் அதை எழுதிவித்தவன் சோழன். அவர்களிடையே வளர் ந்த அன்பே ஒரு காவியம். அந்தக் காவியத்துள் அம்பிகாவதி அமராவதி காதல் இன்னோர் சோக காவியமாகி முடிந்தபோது கம்பனால் அதைத் தாங்க முடியவில்லை.

சோழன் கம்பரை வெறுக்கத் தொடங்கினான்.

அந்தச் 'சிறுமை'யைக் கண்டு கம்பனின் கவியுள்ளம் பொங் கியது. அது கனலாய் கக்கியது.

"மன்னவனும் நீயோ வளநாடும் உனதோ
உன்னையறிந்தோ தமிழை ஓதினேன் - என்னை
விருந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ - உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு"

முடிவில் கம்பர் சோழ நாட்டை விட்டே வெளியேறிவிட்டார்.

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தை அறியாதோர் தமிழறியாதோரே.

ஒரு சமயம் அவரை வீதியிலே சந்தித்த ஒரு பெரிய பட முதலாளி தனது படத்திற்கு பாட்டெழுத வேண்டுமென்றும் வீட்டிற்கு வந்து சந்திக்குமாறும் கூறிச் சென்றார். அழைப்புக்கு மதிப்பு கொடுத்து அவ்வீட்டிற்குச் சென்றார் கவிஞர். வாசலில் நின்ற காவற்காரனிடம் தான் வந்துள்ளதை முதலாளியிடம் சொல்லச் சொன்னார். உள்ளே சென்ற அவன் திரும்பி வந்து "வெளியே நிற்கட்டாம் - பிறகு கூட்பிடுகிறாராம்" என்றான். அழைத்துவிட்டு வெளியே நிற்கச் சொன்ன அந்தச் 'சிறுமை'யை கவிஞரால் பொறுக்க முடியவில்லை. ஒரு பேப்பர் துண்டில் படபடவென்று எதையோ எழுதி அவனிடம் கொடுத்து "இதை உனது முதலாளியிடம் கொடு" என்று விட்டு அவர் வெளியேறிவிட்டார். அதில் காணப்பட்ட கனல் வரிகள் இவைதான்.

"தாயால் பிறந்தேன் தமிழால் அறிவுபெற்றேன் - நாயே
உன்னை நடுத்தெருவில் சந்தித்தேன்
நீ யார்.... என்னை நில் என்று சொல்ல"

- நன்றி -
சிரித்திரன்
(1979)

## எங்கோ கேட்ட பொன்மொழிகள்

* மனிதனை தெய்வமாக்குவதை பிறகு பார்ப்போம். முதலில் மனிதனை மனிதனாக்குங்கள்.

* சிலபேர் கடவுளை "கல்" என்று கூறி "இதனை ஏன் வழிபட வேண்டும்?" என்கிறார்கள். அவர்களிடம் கேளுங்கள் - வெறும் காகிதத்தை கொடுத்தால் வாங்கமறுக்கும் அவர்கள், அதே காகிதத்தாலான பணத்தை கொடுத்தால் மட்டும் ஏன் வாங்கிக் கொள்கிறார்கள்.

* திறக்கமுடியாத கதவுகளை அன்பு எளிதாகவே திறந்து விடுகிறது.

* பெண்களால் நமக்கு எவ்வளவோ ஆறுதல். ஆனால் பெண்கள் இல்லாவிட்டால் நமக்கு ஆறுதலே தேவைப்பட்டிருக்காதே!

* அழகுக்காக மட்டும் ஒரு பெண்ணை மணப்பது, அடித்திருக்கும் பெயின்டிற்காக மட்டும் ஒரு வீட்டை வாங்குவதைப்போல.

* திருமணமா? செய்து கொள்ளுங்களேன். நல்ல மனைவியாக அமைந்தால் மகிழ்ச்சியாக இருக்கப்போகிறீர்கள். மோசமான மனைவியாக அமைந்தால் எப்படியும் ஒரு தத்துவஞானியாகப் போகிறீர்கள்.

* குதிரையும் மனைவியையும் கடிவாளம் இல்லாமல் உபயோகித்தால் ஆபத்து நிச்சயம்.

* "வாயை மூடு" என்று மனைவியை அதட்டுபவன் முட்டாள் கணவன். "நீ வாயை மூடி இருப்பது எவ்வளவு அழகாயிருக்கிறது" என்று சொல்பவன் அறிவுள்ள கணவன்.

தொகுப்பு - வே. சந்திரசேகர்

(2ம் வருட பௌதிகவிஞ்ஞானம்)

## *மடு அகதி முகாம் - 2வது பயணம்*

மடுவில் (மன்னால்) இயங்கும் கதி முகாமுக்கு, கடந்த மே மாதம் பல்கலைக்கழக மாணவர் குழுவொன்று சென்று திரும்பியது.

மீண்டும் கடந்த யூன் 23ம் திகதி 8 மாணவர்களைக் கொண்ட குழு ஒன்று மடுவுக்குச் சென்றது. எட்டுப்பேரில் மூவர் மருத்துவ பயிற்சியை முடித்த மாணவர்களாவர். இவர்கள் அங்கு 5 தினங்கள் தங்கியிருந்து அங்கிருந்த சுமார் 3500 நோயாளருக்கு மருத்துவ உதவிகளைச் செய்திருக்கின்றனர். இவர்கள் தம்முடன் சுமார் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களை எடுத்துச் சென்றிருந்தனர்.

மடு அகதி முகாமைப் பொறுத்தவரை மருத்துவ வசதிகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. பல வியாதிகளுக்கு மருந்து கிடைக்காமல் மக்கள் அவஸ்தைப்படுகிறார்கள். இங்கிருக்கும் மூன்று உதவி மருத்துவர்கள் கூட மருந்துகள் தட்டுப்பாட்டினால் ஏதும் செய்யமுடியாத நிலையிலுள்ளனர். எமது மாணவர்கள் சென்றிருந்த நேரம் பிரெஞ்சு மருத்துவக்குழுவும் சேவையிலீடுபடவில்லை.

மேலும் அகதிமுகாமில் இல்லாத அயலிலுள்ள முரங்கள், அடம்பன், விடத்தல்தீவு போன்ற இடங்களிலிருந்து வந்த மக்களுக்கும் மாணவர் குழு சேவை செய்தது.

மாணவர் குழுவிடம், மடுவின் அயல்பிரதேசங்களிலும் மருத்துவப் பணிகளில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மருத்துவபீட மாணவர்கள் (பயிற்சியை முடித்த அல்லது இறுதி) முன்வரும் பட்சத்தில் இவ்வேண்டுகோள் இலகுவில் நிறைவேற்றப்படலாம்.

மேற்படி குழு சென்ற மருந்துகளில் சுமார் ஒரு லட்சம் பெறுமதியானவை தென்னிந்திய திருச்சபையாலும், கலைப்பீட மாணவர் ஒன்றியம் பணமாக 12,500 ரூபாவும், கியூடெக் நிறுவனத்தால் 10,000 ரூபாயும் ச.செ.சங்கத்தினால் ஒரு தொகுதி மருந்தும் வழங்கப்பட்டிருந்தன.

## போராளிகளைப் பராமரிப்பதில் நாம்....

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு முகாம் தகர்ப்புப் போராட்டத்தில் காயமடையும் போராளிகளை பராமரிப்பதில் எமது வளாக மாணவர்கள் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். எமது மண்ணை மீட்பதற்காக தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்து களத்தில் நின்று போராடும் போளிகளுக்கு இத்தகைய உதவிகளை நாம் செய்வது கட்டாயமாகிறது. அகில உலகமுமே உன்னிப்பாக கவனித்து வரும் இந்தப் போராளது எமது போராட்ட வரலாற்றிலே ஒரு முக்கியமான யுத்தமாகும். எதிரியுடன் மிக நெருங்கிய நிலையில் நின்று கொண்டு வீரர்கள் போராடுகிறார்கள். தங்கள் உயிரைக் கொடுத்தாவது எதிரியை நமது மண்ணைவிட்டு ஓடச் செய்ய வேண்டுமென்ற தியாக மனப்பான்மையுடன் போராடும் அந்த வீரர்கள் காயமடைந்து வரும்போது அவர்களை நாம் பராமரிக்க வேண்டும். அவர்களைப் பராமரிக்க போராளிகளே வைத்தியசாலையில் நின்றால் களத்திலே எதிரியுடன் மோதுவது யார்?

எனவேதான் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் போரிலே காயமடைந்து வரும் போராளிகளை பராமரிக்க வேண்டுமென மாணவரவை முடிவு செய்தது. அதற்கேற்ப எமது மாணவர்கள் இரவு, பகல் இருநேரமும் தொடர்ந்து போராளிகளை பராமரிப்பதில் ஈடுபட்டு வருகின்றார்கள். இந்தப் பணிகளை செய்கின்ற மாணவர்களுக்கு நன்றிகளை தெரிவிப்பதோடு, சகல மாணவர்களும் இதில் ஈடுபடவேண்டுமெவும் விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறது.

கல்வி வசதிகளை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. மரங்களின் நிழலிலேயே வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இருந்தும் கல்வி உபகரணங்கள் இல்லாமையால் அவற்றுவும் பயனில்லாமல் போகின்றது. உணர்தர மாணவர்களுக்கு கல்வி வசதிகள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இங்குள்ள மேற்படி நிலைமைகளை அவதானித்த எமது மாணவர் குழு, மிகவும் அத்தியாவசியம் எனக்கருதிய சுகாதார வசதிகளைச் சீர் செய்வதிலேயே அதிக அக்கறை காட்டினர். குப்பைக் கிடங்குகள் அமைத்தல், கிணறுகளைத் துப்பரவாக்கல், மலசலக் குழிகளை அமைத்தல், கைவிடப்பட்ட, பாவிக்கின்ற வாய்க்கால் வடிகால்களைத் துப்பரவு செய்து சீர் செய்தல், மேலும் புதிய வடிகால்களை அமைத்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டார்கள். எமது மாணவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு மேற்படி வேலைகளில் ஈடுபட்டது குறித்து பலரும் பாராட்டுத் தெரிவித்தது இங்கு குறிப்பிடவேண்டும்.

கல்வி வசதிகளில் எமது மாணவர்கள் பணியாற்றக்கூடிய சூழ்நிலை இல்லாதிருந்த போதும் அங்கிருந்த 7 நாட்களில் சில மாணவர்கள் தம்மால் இயன்றளவுக்கு கற்பித்தல் பணியையும் செய்தனர்.

இறுதியாக மாணவர்குழு தம்முடன் எடுத்துச் சென்றிருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியுள்ள 2000பால் மா பைகள் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. இறுதி நாள் மாலையில் மாணவர்குழு மடு ஆலய நிர்வாகிகளையும் அங்குள்ள தொண்டர் ஸ்தாபனங்களையும் கலந்துரையாடியதுடன் பிரெஞ்சு மருத்துவக்குழுவை தொடர்ந்து பணிபுரியும்படி மாணவரவை சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

எமது மாணவர் குழுவின் இப்பயணத்திற்கு உடனடியாக நிதியுதவி செய்த துணைவேந்தர் அவர்களுக்கும், பயணத்தின் போது உதவிய இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் (யாழ் பிரிவு) மடு ஆலயநிர்வாகம், விவசாயபீடாதிபதி ஆகியோருக்கு மாணவரவை தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

அடுத்த இதழில்---

* யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர் அமைப்புக்கள்

-தகவல் கட்டுரை-

* இலக்கியரசம்

* விரிவுரையாளருடன் செவ்வி

மற்றும் பல சிறப்பான அம்சங்களுடன்

வெளிவர இருக்கின்றது.

மாணவ நண்பர்களே!

இனிய படைப்பாளிகளே! சக்கரம் தொடர்ந்து சுழல்வது உங்கள் கைகளில்தான் இருக்கின்றது. நீங்கள் தரும் ஆதரவு தான் எங்கள் முயற்சிகளை ஊக்குவிக்கும். நம்மிடையே எத்தனையோ படைப்பாளிகள் இருந்தும் அவர்கள் சக்கரத்தோடு தம்மை இணைத்துக்கொள்ள இன்னும் முன்வரவில்லை. நண்பர்களே! உங்கள் திறமைகளை வெளிக்காட்ட நல்லதோர் சந்தர்ப்பம். பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பல்துறை சார்ந்த உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

-நன்றி-

SCIENCE FACULTY STUDENTS UNION
P. O. BOX 57 UNIVERSITY OF JAFFNA
JAFFNA, SRI LANKA